

திருச்சியில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு இரண்டு நாட்களாக நடைபெற்ற தொடர் நிகழ்ச்சியில், நீண்ட நாட்களாக நகர்ப்புற பகுதிகளில் குடியிருக்கும் 948 குடியிருப்பு வாசிகளுக்கு அவர்கள் இருந்த இடத்திற்கே நேரில் சென்று இலவச பட்டாக்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், மாநகராட்சி ஆணையாளர் சரவணன், மாநகராட்சி மேயர் அன்பழகன், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, நகர பொறியாளர் சிவபாதம் மற்றும் கழக நிர்வாகிகள் சேர்மன் துரைராஜ், மாத்தூர் கருப்பையா, டோல்கேட் சுப்பிரமணி, மாவட்டத் துணைச் செயலாளர் முத்து செல்வம், விஜயா ஜெயராஜ், காஜாமலை விஜய், பொதுச் செயலாளர்கள் கமால் முஸ்தபா, மோகன்தாஸ், நாகராஜ், இளங்கோ, மண்டலத் தலைவர் விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி, கிராப்பட்டி செல்வம், கலைச்செல்வி, சாமிநாதன், புஷ்பராஜ் குபேந்திரன்தில்லை மனோகரன், வண்ணை மோகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பகுதி செயலாளர்கள், கவுன்சிலர்கள், வட்டச் செயலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திருச்சி மேற்கு தொகுதியில் ரூ.392 கோடி மதிப்பில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார்!

திருச்சி, மே 21-

திருச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, திருச்சி மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 16, 17 ஆம் தேதிகளில் ரூபாய் 392 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை தொடங்கி வைத்ததோடு முடிந்த பணிகளை பொது மக்கள் பயன்பாட்டுக்கு திறந்தும் வைத்தார்.

16ஆம் தேதி அன்று ஒருங்கிணைந்த காய்கறி மார்க்கெட் ரேஷன் கடை 2 கிலோமீட்டர் தொலைவிற்கு புறவழிச் சாலை திட்டம் உள்ளிட்ட 321 கோடி மதிப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டில் முடிந்த பணிகளை மக்களுக்கு அர்ப்பணித்தார் .

தொடர்ந்து 17ஆம் தேதி அன்று கோரையாறு மற்றும் உய்யக்கொண்டான் கிழக்குக்கரை பகுதியில் ரூபாய் 68 கோடி மதிப்பீட்டில் 2.1 கிலோமீட்டர் தொலைவிற்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு பூமி பூஜை செய்து திட்டங்களை தொடங்கி திட்டப்பணி களை தொடங்கி வைத்தார்.

### ஆழ்துளை கிணறு - குடிநீர் தொட்டி திறப்பு

திருச்சி மேற்கு தொகுதிக்குட்பட்ட அரவானூர் மேலபாண்டமங்கலம் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பயணியர் நிழற்குடையினையும், கீரக்கொல்லைத் தெருவில் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூபாய் 22.80 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கழிப்பிடம், சோழராஜபுரம் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூபாய் 12 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கழிப்பிடம் வண்டிக்காரத் தெரு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூபாய் 3 லட்சம் மதிப்பீட்டில் மின் மோட்டாருடன் கூடிய ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் தொட்டியையும், தெற்கு வெள்ளாளத் தெரு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூபாய் 3.லட்சம் மதிப்பீட்டில் மின் மோட்டாருடன் கூடிய ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் தொட்டியையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

தொடர்ந்து புத்தூர் வடக்கு முத்துராஜா தெரு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூபாய் 3 லட்சம் மதிப்பீட்டில் மின் மோட்டாருடன் கூடிய ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் தொட்டியையும், இராமலிங்க நகர் இரண்டாவது பிரதான தெரு பகுதியில் ரூபாய் 3 லட்சம் மதிப்பீட்டில் மின்மோட்டாருடன் கூடிய ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் தொட்டியையும், தெற்கு இராமலிங்க நகர் பகுதியில் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூபாய் 3 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் தொட்டி புத்தூர் அக்ரஹாரம் பகுதியில் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூபாய் 2.85 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் தொட்டி அமைக்கப்பட்டுள்ளதை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

### நியாய விலைக் கடை - உடற் பயிற்சி மையம் திறப்பு

தொடர்ந்து ராம்நகர் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூபாய் 13 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலை கடை கட்டிடம் வண்ணாரப்பேட்டை பகுதியில் மாநகராட்சி பொதுநிதியின் கீழ் ரூபாய் 59 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்களையும், இனாம்தார் தோப்பு அண்ணா நகர் முதல் குறுக்குத் தெரு பகுதியில் கல்வி நிதி திட்டத்தின் கீழ் ரூபாய் 12 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள திறந்த வெளி உடற்பயிற்சி மையம் கட்டிடம் அண்ணா நகர் 2வது குறுக்குத் தெரு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூபாய் 20 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள உடற்பயிற்சி மையம் கட்டிடம் புதுமாரியம்மன் கோவில் தெரு பகுதியில் கல்வி நிதியின் கீழ் ரூபாய் 37.40 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக்கட்டிடத்தையும் பயன்பாட்டிற்காக நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு திறந்து வைத்தார்.

### 948 குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டா!

திருச்சி மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற விழாக்களில் கீரக்கொல்லை தெரு, காளையான் நாடார்தெரு, கல்லரை மேட்டுத்தெரு, கீழகல்நாயக்கன் தெரு, நோவா காலனி, வண்ணாரப்பேட்டை, கள்ளாங்காடு, எம்.ஜி.ஆர்.நகர், திடீர்நகர், பென்சனர் தெரு, ஆட்டு மந்தை தெரு, சவேரியார் தெரு, பழைய போஸ்ட் ஆபிஸ் தெரு, காஜாமலை லூர்துசாமி பிள்ளை தெரு, மங்கம்மா சாலை, பிள்ளையார் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் நீண்ட நாட்களாக நகர்புற பகுதிகளில் குடியிருந்து வரும் 948 குடியிருப்பு வாசிகளுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டாக்களை அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் சரவணன். நகரப் பொறியாளர் சிவபாதம், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாவட்ட துணைச் செயலாளர் முத்து செல்வம் விஜ யா ஜெயராஜ், சேர்மன் துரைராஜ், மாத்தூர் கருப்பையா, காஜாமலை விஜய் உட்பட பகுதி செயலாளர்கள் கமால் முஸ்தபா மோகன்தாஸ் நாகராஜ், இளங்கோ, மற்றும் கழக நிர்வாகிகள் கிராப்பட்டி செல்வம், சோழன் சம்பத், முத்துப் பழனி திருநாவுக்கரசு, ஹரி, தனபால் புஷ்பராஜ், மூவேந்தரன் மண்டல தலைவர்கள் மாநகராட்சி உறுப்பினர்கள் வட்டச் செயலாளர்கள் மாநகராட்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அரசு கலை - அறிவியல் கல்லூரி சேர்க்கைக்கு இணைய வழி விண்ணப்பப் பதிவு!

# 13 நாட்களில் - 1,61, 324 மாணவர்கள் பதிவு!

## உயர் கல்வித் துறை அமைச்சர் - முனைவர் கோவி.செழியன் தகவல்!

சென்னை, மே 21 -

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்பப் பதிவு தொடங்கப்பட்ட 13 நாட்களில் 1,61,324 மாணாக்கர்கள் பதிவு செய்துள்ளனர் - என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளதாவது:

07.05.2025 அன்று தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு தொடங்கப்பட்டது. 19.05.2025 அன்று மாலை 6 மணி நிலவரப்படி 1,61,324 மாணாக்கர்கள் விண்ணப்பப்பதிவு செய்துள்ளனர். இதில் 46,691 மாணவர்களும், 75,959 மாணவிகளும், 48 மூன்றாம் பாலினத்தவரும் ஆக மொத்தம் 1,22,698 மாணாக்கர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்தி உள்ளனர்.

மாணாக்கர்கள் www.tngasa.in என்ற இணையதள முகவரியில் தங்களது சேர்க்கைக்கான விண்ணப்பங்களை 27.05.2025 வரை பதிவு செய்து கொள்ளலாம். மாணாக்கர்களுக்கு ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் தமிழ்நாடு முழுவதும் 165 உதவி மையங்கள் (Help Desk) மற்றும் மாணாக்கர் சேர்க்கை வழிகாட்டு சேவை மையங்கள் (Admission Facilitation Centre) நிறுவப்பட்டுள்ளன. அந்தந்த சேவை மையங்களை தொடர்பு கொள்ளலாம். மேலும், 04424342911 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவோ அல்லது dceofficehelpdesk@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாகவோ தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், சென்னை மண்டலத்தில் உள்ள கீழ்க்கண்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்களின் தேவைக்கேற்பவும், வேலைவாய்ப்பு பெற்றுத்தரும் தனித்துவமான பாடப்பிரிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன:

வழக்கமான கலை, அறிவியல், மேலாண்மை பாடப்பிரிவுகளோடு தனித்துவமான பாடப்பிரிவுகள்

இராணி மேரி கல்லூரி (தன்னாட்சி), கல்லூரி -

- இளநிலை புவியியல், சுற்றுலா மற்றும் பயண மேலாண்மை (*Geography Travel and Tourism Management*)
- மனையியல், ஊட்டச்சத்து மற்றும் உணவுச் சேவை மேலாண்மை (*Home Science, Nutrition and Food Service Management*)
- மனையியல், மருத்துவ ஊட்டச்சத்து மற்றும் உணவு முறை (*Home Science - Clinical Nutrition & Dietetics*)
- இந்திய இசை (*Indian Music*)
- அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), நந்தனம் - இளநிலை புள்ளியியல் (*Statistics*)
- டாக்டர். அம்பேத்கர் அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), வியாசர்பாடி
- இளநிலை மனையியல் ஊட்டச்சத்து மற்றும் உணவுச் சேவை மேலாண்மை மற்றும் உணவு முறை (*Home Science Nutrition and Food Service Management and Dietetics*), இளநிலை உளவியல் (*Psychology*)
- இளநிலை காட்சி தொடர்பியல் (*Visual Communication*)

காயிதேஇமில்லத் அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) - இளநிலை மனையியல் (*Home Science*),

அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆலந்தூர் - இளநிலை உளவியல்(*Psychology*)

மாநிலக் கல்லூரி, சென்னை - இளநிலை புவியமைப்பியல் (*Geology*)

- இளநிலை புள்ளியியல் (*Statistics*), இளநிலை காது கேளாத வாய் பேசாத மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்கான பி.காம் மற்றும் பி.சி.ஏ *B.Com(Hearing Impaired), BCA(Hearing Impaired)*

மாணாக்கர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகளின் வாரிசுகள்

# 84 பேருக்கு பட்டப்படிப்பு - உயர்கல்வி உதவித்தொகை!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், மே 21-

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், பிரதிநிதிகள், பிஎல்ஏ 2 வைச் சேர்ந்த நிர்வாகிகளின் குடும்பத்தில் உள்ள வாரிசுகளின் பட்டப்படிப்பு மற்றும் உயர் கல்விக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை என்ற பெயரில் கடந்த ஐந்து ஆண்டுகளாக மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கி வருகிறார்.

அதன் அடிப்படையில் எருமப்பட்டி, ஒன்றியம், எருமப்பட்டி, சீராப்பள்ளி, காளப்பநாயக்கன்பட்டி, வெண்ணந்தூர், அத்தனூர், இரா.புதுப்பட்டி, பட்டணம், பிள்ளாநல்லூர் ஆகிய பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கிளை செயலாளர்கள், பி எல் ஏ 2 ஆகியோரின் வாரிசுகளுக்கு பட்டப்படிப்பு மற்றும் உயர் கல்விப் பயிலும் மாணவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம் கலைஞர் இல்லம் பேராசிரியர் அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் கே.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட எருமப்பட்டி ஒன்றியம், எருமப்பட்டி பேரூர், நாமகிரிப்பேட்டை பேரூர், சீராப்பள்ளி பேரூர், ஆர். புதுப்பட்டி பேரூர், பிள்ளாநல்லூர் பேரூர், பட்டணம் பேரூர், வெண்ணந்தூர் பேரூர், அத்தனூர் பேரூர் மற்றும் காளப்பநாயக்கன் பட்டி பேரூர் கழகத்தில் உயிர்நாடியாக இருக்கும் கிளை கழக, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் BLA2 அவர்களின் குடும்பத்தில் பட்டப்படிப்பு மற்றும் உயர்கல்வி படிக்கும் வாரிசுகளுக்கு கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நல்லாசியுடன் கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தொழிற்கல்வி படிக்கும் 43 பேருக்கும், பட்டப்படிப்பு படிக்கும் 41 பேருக்கும் ஆக மொத்தம் 84 பேருக்கு இரண்டாம் கட்டமாக முத்தமிழறிஞர் கலைஞர்

கல்வி உதவி தொகையை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என். இராஜேஸ்குமார் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய தி.மு.க. செயலாளர்கள் கே.பி.இராமசுவாமி, அ. அசோக்குமார், பாலசுப்பிரமணியம், பேரூர் செயலாளர்கள் என்.செல்வராஜு, கு.அன்பழகன், பொன்.நல்லதம்பி, ஆர்.எஸ்.எஸ்.இராஜேஷ், அ.சுப்பிரமணியம், முருகேசன், பழனியாண்டி, கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் விமலா சிவகுமார், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பா.கிருபாகரன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பொன்.சித்தார்த், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்பரர் வ.இளம்பரிதி, இரா.கலைவாணன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் , தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், விளந்தை ஊராட்சி, விளந்தை அரசு ஆதிதிராவிடர் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் ஊராட்சிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு அரசுத் துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள எருமப்பட்டி, ஒன்றியம், எருமப்பட்டி, சீராப்பள்ளி, காளப்பநாயக்கன்பட்டி, வெண்ணந்தூர், அத்தனூர், இரா. புதுப்பட்டி, பட்டணம், பிள்ளாநல்லூர் ஆகிய பேரூர் வார்டு கழக கிளைச் செயலாளர்கள், பிரதிநிதிகள், பி எல் ஏ 2 ஆகியோரின் வாரிசுகளின் பட்டப்படிப்பு மற்றும் உயர் கல்விக்கு 84 மாணவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகையை நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், பி எல் ஏ 2 நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் தி.மு.க. கூட்டணி மண்டல பொறுப்பாளர் அறிமுக ஆலோசனைக் கூட்டத்தில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அர.சக்கரபாணி சிறப்புரை ஆற்றினார். கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி.சுகவனம், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம்.வெங்கடேசன், மாநில மகளிர் ஆணைய குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் கே.வி.எஸ். சீனிவாசன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் ரமேஷ், தேவகுமார், முனிவேல், உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.